# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

| | | | | |
|---|---|---|---|---|
| மலர்:4 | இதழ்:9 | ஜுன்:2020 | ரூ.10/- | வருட சந்தா:ரூ.100/- |
| Volume:4 | Issue:9 | June : 2020 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |








## ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு, கோட்டூர், சென்னை - 600 085. தொலைபேசி : 044 - 2447 4744

### ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகாநந்த ப்ர்ம்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் அருளாணைப்படி

2020 மார்ச் மாதம் முதல் தொடர்ந்து அவரவர் இல்லங்களில் ஸ்ரீ லலிதா ஸகஸ்ர நாம பாராயணம், ஸ்ரீசக்ரத்திற்கு குங்கும அர்ச்சனை, அம்பாளுக்கு உபசார பூஜைகள் செய்து கொண்டு உள்ளார்கள்.

மேலும் 2020 ஜூன் மாதம் முடிய தொடர்ந்து ஸ்ரீ அம்பாளுக்கு உபசார பூஜைகள், ஸ்ரீசக்ரத்திற்கு குங்கும அர்ச்சனை செய்து கோவிட் 19 தொற்று நோயை வென்று ஆரோக்கியமாக வாழ கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீ சுப்ரமணியம்
செயலாளர் - 9444075811
ஸ்ரீ மஹா மேரு மண்டலி

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 9

**நமஸ்தே[1] அஸ்து[1] ப[4]க[3]வன் விச்வேச்வராய**
**மஹாதே[3]வாய த்[1]ரயம்ப[3]கா[1]ய**
**த்[1]ரிபு[1]ராந்த[1]கா[1]ய த்[1]ரிகா[1]க்[3]னி கா[1]லாய கா[1]லாக்[3]னி ருத்[3]ராய**
**நீலக[1]ண்டா[2]ய ம்ருத்[1]யுஞ்ஜயாய ஸர்வேச்வராய ஸதா[3]சிவாய**
**ஸ்ரீமன் மஹாதே[3]வாய நமஹ**

**- யஜுர் வேதம், ஸ்ரீ ருத்ரம்**

*பொருள்:*

*போற்றுதும் நினை பகவன் விச்வேச்வரா மஹாதேவா முக்கண்ணா முப்புரம் எரித்தவா முச்சுடர்காலா காலாக்னி ருத்ரா நீலகண்டா நமனை வென்றவா ஸர்வேச்வரா ஸதாசிவா திருவுடை மஹாதேவா போற்றி!*

*ஓம் சாந்தி:சாந்தி:சாந்தி:*

# வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 4 இதழ்: 9

*அச்சிட்டு வெளியிடுபவர்*
*பதிப்பாளர், ஆசிரியர்*
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 *அன்னை இந்திரா நகர்,*
*வேளச்சேரி, சென்னை - 600 042.*
*செல்: 94434 95950*

*அச்சகம்*
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
*39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,*
*சென்னை - 600 010.*


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| *வருட சந்தா* | *ரூ.100* |
| *ஆயுள் சந்தா* | *ரூ.1500* |

*சந்தா அனுப்புகிறவர்கள்*
**Vedabharathi**
*என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.*

*வங்கி மூலம் புத்தக சந்தா*
*நன்கொடை வழங்கிட*
**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**


**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**Published on : 1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**


# புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| *ஒரு நிமிடம் உங்களோடு..* | *5* |
| *ஆனி மாத விசேஷங்கள்* | *7* |
| *அட்டைப்பட விளக்கம்* | *9* |
| *தர்மத்தின் குரல்* | *11* |
| *ஸ்ரீமத் பகவத்கீதை* | *12* |
| *முதுமை - இனிய யதார்த்தம்* | *14* |
| *ஸ்ரீ ஸதாசிவப்ரம்மேந்தரரின் திவ்ய சரித்திரம்* | *16* |
| *சிருங்கேரி மஹா சுவாமிகள்* | *19* |
| *ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கு* | *25* |
| *பெற்றோர்களே கவனியுங்கள்* | *27* |
| *கம்பராமாயணம்* | *29* |
| *பாரத தேச புனித யாத்திரை* | *30* |
| *தெரிந்துகொள்வோமே* | *36* |
| *குருவருள்தான் என் வெற்றிக்கு காரணம்* | *39* |
| *புரோஹிதர்* | *42* |



*புத்தக வடிவமைப்பு :*
**ரெம்ஸ் பிரிண்டீஸ்**
*நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,*
*காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.*
*போன்: 8939000064*



*நிர்வாக முகவரி:*
*எண்.31, சேஷாத்திரிபுரம்*
*1வது மெயின் ரோடு, பேபி நகர்,*
*வேளச்சேரி, சென்னை - 600 042.*
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# ஒரு நிமிடம் உங்களோடு.....

*பகவான் மஹாவிஷ்ணு எல்லா ப்ராணிகளுக்கும் அன்பு நிறைந்த ஆன்மா, உற்ற நண்பன், குழந்தையான பிரஹ்லாதன் "என்னுடைய மனதை நான் அர்ப்பிக்க வேண்டியது என்னுடைய தந்தையிடமோ, தாயிடமோ அல்ல.* **"என்னுடைய மனதை அர்ப்பிக்க வேண்டியது என்னுடைய அந்தராத்மாவான அந்த விஷ்ணுவிடத்தில்தான். காரணம் அவர் என்னுடைய "பிரிய ஆத்ம ஸுஹ்ருது". எப்போதும் என் கூடவே இருக்கும் என்னுடைய ஆத்மாதான் என்னுடைய ஈஸ்வரன்"** *என்கின்றான்.*

*அதனால்* **"எப்போதும் நம்முடன் பகவான் இருக்கிறார்"** *என்று நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி நினைப்பவருக்கு கிடைப்பதுதான் ''விவேகம்''. இதற்கு வைராக்யமுள்ள மனதும் பக்தியும் வேண்டும். அதாவது அலைபாயும் நம்முடைய மனதை அதிலிருந்து விடுவித்து பகவானை நினைப்பதுதான்* **"வைராக்யம்"** *அப்படி உள்ள மனதை பகவானிடம் சமர்ப்பிக்க வேண்டும். நாம் என்ன மந்திரம் ஜபிக்கிறோம், எந்த இடத்தில் ஜபிக்கிறோம், எப்படி ஜபிக்கிறோம் என்பது முக்கியமல்ல. நம் மனது எங்கே இருக்கிறது என்பதுதான் முக்கியம். ரத்னாகரன்* **"ராம" "ராம"** *என்று ஜபிப்பதற்கு பதிலாக* **"மரா, மரா, மரா"** *என்றுதான் ஜபித்தான். பகவான் கூறுகிறார்.* **"சர்வேஷு காலேஷு மாம் அனுஸ்மர"** *= எப்போதும் என்னையே நினை.*

*நாம் மூன்று விஷயங்களைப் புரிந்துக்கொள்ள வேண்டும்.*

*1. வெளியில் ஒரு ஈஸ்வரனும் கிடையாது. நம் உள்ளேதான் இருக்கிறார்.*

*2. சொர்க்கமும், நரகமும் வேறு உலகில் இல்லை. நம் உள்ளேதான் இருக்கின்றன. ஸ்ரீமத் பாகவதத்தில் 3வது ஸ்கந்தத்தில் 30வது அத்தியாயத்தில் 29வது ஸ்லோகத்தில் கபிலபகவான் தன் தாயாரிடம்* **"அத்ரைவ நரக ஸ்வர்க்க இதி மாதா ப்ரசக்ஷதே..."** *ஹே தாயே ஸ்வர்க்கமும் நரகமும் இவ்வுலகில் இருப்பதாக சொல்லுகிறார்கள்" நாம் விவேகத்தில்*

உயர்ந்தால் நாம் சொர்க்கத்தில் இருக்கிறோம். நாம் விகாரத்தில் மூழ்கினால் நாம் நரகத்தில் இருப்போம்.

3. வெளியில் உள்ள யாராலும் நம்முடைய மனதை உயர்த்தவும், தாழ்த்தவும் முடியாது. நாம் அனுமதித்தால்தான் நம் மனது தாழும் அல்லது உயரும்.

தினமும் காலையில் எழுந்திருக்கும் போது நாம் நம் மனதில் முதலில் நினைக்க வேண்டியது **"அந்த பகவான் என் உள்ளே உள்ளதால்தான் நான் உணர்ந்து எழுந்திருக்கிறேன்"** என்று.

இன்று உலகில் பலரும் **''வாழ்க்கையின் சுகம், அனுபவங்களில் தான்''** என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் வாழ்க்கையின் சுகம் சிந்தனையில்தான் என்று நாம் சிந்திக்க வேண்டும். பகவானும் நாமும் வேறு வேறு அல்ல. இருவரும் ஒன்றுதான்.

பீஷ்மர் உடல் எல்லாம் அம்புகள் தைத்து அந்த அம்பு படுக்கையில்படுத்திருக்கும் போதும் பகவானைத்தான் நினைத்துக் கொண்டிருந்தார். நாமும் எப்போதும் பகவானையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். கீதையில் இதைத்தான் பகவான் கூறுகிறார்.

**அனன்யாஸ் சிந்தயந்தோ மாம் யே ஜனா பர்யுபாஸதே**

**தேஷாம் நித்யாபியுக்தானாம் யோக க்ஷேமம் வஹாம்யஹம்.**

**(கீதை 9-22)**

அன்னியரல்லாராய் என்னையே நினைத்து யாண்டும் என்னையே உபாசிக்கும் நித்திய யோகிகளுடைய யோக க்ஷேமத்தை நான் வழங்குகிறேன்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அந்த பகவானால்தான் என்று நினைக்க வேண்டும்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# ஆனி மாத விசேஷங்கள்

## (ஜுன் 15.06.2020 முதல் ஜுலை 15.07.2020 வரை)

| | | | |
|---|---|---|---|
| *17.06.2020* | *ஆனி 3* | *புதன்* | *ஸர்வ ஏகாதசி, ஸ்ரீ கூர்ம ஜெயந்தி* |
| *18.06.2020* | *ஆனி 4* | *வியாழன்* | *ப்ரதோஷம்* |
| *19.06.2020* | *ஆனி 5* | *வெள்ளி* | *மாத சிவராத்திரி, சிதம்பரம் ஆனி திருமஞ்சனம் உற்சவம் ஆரம்பம்* |
| *20.06.2020* | *ஆனி 6* | *சனி* | *ஸர்வ அமாவாசை* |
| *21.06.2020* | *ஆனி 7* | *ஞாயிறு* | *சூர்ய க்ரஹணம்* |
| *26.06.2020* | *ஆனி 12* | *வெள்ளி* | *சஷ்டி, ஸ்ரீ அழகிய சிங்கர் ஜெயந்தி* |
| *28.06.2020* | *ஆனி 14* | *ஞாயிறு* | *ஆனி திருமஞ்சனம்* |
| *29.06.2020* | *ஆனி 15* | *திங்கள்* | *மஹா சுதர்சன ஜெயந்தி* |
| *01.07.2020* | *ஆனி 17* | *புதன்* | *ஆஷாடசுத்த ஏகாதசி* |
| *02.07.2020* | *ஆனி 18* | *வியாழன்* | *சாதுர்மாஸ்ய விரதம் ஆரம்பம்* |
| *04.07.2020* | *ஆனி 20* | *சனி* | *குரு பூர்ணிமா, காரைக்கால் அம்மையார் மாங்கனி திருவிழா ஆனி மூலம் அருணகிரிநாத ஸ்வாமிகள் திருநக்ஷத்ரம்* |
| *05.07.2020* | *ஆனி 21* | *ஞாயிறு* | *பௌர்ணமி - வியாச பூஜை* |
| *08.07.2020* | *ஆனி 24* | *புதன்* | *சங்கடஹர சதுர்த்தி* |
| *11.07.2020* | *ஆனி 27* | *சனி* | *சஷ்டி* |

## ஸர்வ அமாவாசை (ஆனி) 20.06.2020

*ஸார்வரி நாம ஸம்வத்ஸரே உத்தராயணே க்ரீஷ்ம ருதௌ மிதுனமாஸே கிருஷ்ண பக்ஷே சதுர்தஸ்யாம் (பகல் 12.34க்கு மேல் அமாவாஸ்யாம்) புண்ய திதௌ ஸ்திர வாஸர யுக்தாயாம் ரோஹிணீ நக்ஷத்ர யுக்தாயாம் (பகல் 12.58க்கு மேல் ம்ருகஷிரோ) ஸூலயோக ஸகுனீ கரண ஏவங்குண விசேஷன விஸிஷ்டாயாம் சதுர்தஸ்யாம் புண்ய திதௌ (ப்ராசீனாவீதி) அக்ஷய த்ருப்த்யர்தம் அமாவாஸ்ய புண்ய கால தர்ஸ ஸ்ராத்தம் தில தர்பண ரூபேண அத்யகரிஷ்யே*

## பார்கவ சூடாமணி சூரியகிரஹணம்

*21.06.2020 ஞாயிற்றுக்கிழமை (ஆனி மாதம் 7ம் தேதி) அமாவாசை திதியில் மிருகசீரிஷ நக்ஷத்திரத்தில் சம்பவிக்கிறது.*

*கிரஹண ஆரம்பம் காலை 10.22 மணி*

*மத்தியமம் காலை 11.59 மணி,*

*மோக்ஷம் மதியம் 01.42 மணி*

*20.06.2020 சனிக்கிழமை இரவு 10.00 மணிக்குள் சாப்பிட்டுவிட வேண்டும். மிருகசீரிஷம் நக்ஷத்திரகாரர்கள் மட்டும் கிரஹண பரிகாரம் செய்ய வேண்டும்.*

*21.06.2020 ஞாயிற்றுக்கிழமை (ஆனி மாதம் 7ம் தேதி) கிரஹண ஆரம்பத்தில் குளித்து காலை 10.22 க்கு மேல் 11.50க்குள் பித்ருதர்ப்பணம் செய்ய வேண்டும். அதற்குண்டான ஸங்கல்பம்.*

*ஸார்வரி நாம ஸம்வத்ஸரே உத்தராயணே க்ரீஷ்ம ருதௌ மிதுனமாஸே கிருஷ்ண பக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ பானு வாஸர யுக்தாயாம் மிருகஷிரோ நக்ஷத்ர யுக்தாயாம் கண்ட நாமயோக நாகவ கரண ஏவங்குண விஸேஷண விசிஷ்டாயாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ சூடாமணி சூர்யோபராக புண்யகால சூர்யோபராக ஸ்ராத்தம் ஹிரண்ய ரூபேண அத்ய கரிஷ்யே ததங்கம் தில தர்பண ரூபணே அத்யகரிஷ்யே.*

*கிரஹணம் விட்டபின் ஸ்நாநம் செய்ய வேண்டும்.*

*மற்ற சூரிய கிரஹணங்களைவிட சூடாமணி சூரிய கிரஹணம் பல மடங்கு புண்ணியங்களை தரவல்லது.*

*ஆசிரியர்.*

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

*எண்.9, பழனி ஆண்டவர் தெரு,*

*ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.*

**திருமதி. தனலட்சுமி** 9444140119

**திருமதி. ராஜலட்சுமி** 7092199447

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

*புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :*

**ஸ்ரீ பாலசுப்பிரமணியன்** 9442094380

**ஸ்ரீ நடராஜன்** 9443103404

# அட்டைப்பட விளக்கம்

*அபிஷேகப்பிரியர் சிவன்! அலங்காரப்பிரியர் விஷ்ணு! இது முதுமொழி.*

**“திருமஞ்சனம்”** *என்றால் மஹாபிஷேகம் (மஹா அபிஷேகம்) என்று பொருள். பொதுவாக சிவாலயங்களில் அருள்பாலிக்கும் சிவபெருமானுக்கு தினமும் அபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெறும். ஒரு நாளைக்கு வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அர்த்தஜாமம் என்று ஆறு பொழுதுகள் உண்டு. இதை அடிப்படையாகக் கொண்டுதான் ஆலயங்களில் தினமும் 6 கால பூஜை நடத்துகிறார்கள்.*

*ஆனால் ஆடலரசனான ஸ்ரீ நடராஜருக்கு வருடத்தில் ஆறு நாட்கள் மட்டுமே விசேஷமாக அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. அதாவது (1) சித்திரை மாதம் திருவோணம் (2) ஆனி மாதம் உத்திரம் (3) ஆவணி மாதம் சுக்லபக்ஷ சதுர்தசி (4) புரட்டாசி மாதம் சுக்ல சதுர்தசி (5) மார்கழி மாதம் திருவாதிரை (6) மாசி மாதம் சுக்ல சதுர்தசி. இவைகளே தினஸரி நடைபெறும் ஆறுகால பூஜைக்குச் சமமானவைகளாக அறியப்படுகின்றன.*

*நம்முடைய ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் என்பார்கள். தேவர்களுக்கு வைகறைப் பொழுது (விடியற்காலை) என்பது மார்கழி மாதம் ஆகும். அதே போல் காலைப் பொழுது மாசி மாதமாகவும், உச்சிகாலம் சித்திரை மாதமாகவும் மாலைப் பொழுது என்பது ஆனி மாதமாகவும், இரவு பொழுது ஆவணி மாதமாகவும், அர்த்த சாமம் என்பது புரட்டாசி என்றும் கருதப்படுகிறது. இவற்றில்* **“ஸந்த்யா காலம்”** *என்று விளங்கும் மார்கழி மாதமும், ஆனி மாதமும் இறை வழிபாட்டிற்கு மிக உகந்த மாதங்களாகக் கருதப்படுகின்றன. அதனால் தான் மார்கழி திருவாதிரையும், ஆனி திருமஞ்சனமும் திருவிழாவாகவே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.*

*ஆனித்திருமஞ்சன விழா முதன் முதலில் பஞ்ச பூத ஸ்தலங்களில் ஆகாயத்தைக் குறிக்கும் சிதம்பர ஸ்தலத்தில்தான் தோன்றியது. ஆதிசேஷனின் அவதாரமாகிய பதஞ்சலி மகரிஷி இந்த திருவிழாவைத் தொடங்கிவைத்ததாக புராணங்கள்*

கூறுகின்றன. ஆனி திருமஞ்சனம் ஆடலரசனான நடராஜ பெருமானுக்குரிய நாளாகப் போற்றப்படுவதால் எல்லா சிவாலயங்களிலும் ஆனித் திருமஞ்சனம் விழாவாகவே கொண்டாடப்படுகிறது.

ஆனித் திருமஞ்சன தினத்தன்று தில்லை நடராஜருக்கு மனம் குளிர்விக்கும் வகையில் வித விதமான பொருட்களால் அபிஷேகங்களும், அலங்காரங்களும், வேதபாராயணமும், திருமுறை பாராயணமும் மிக விமரிசையாக நடைபெறும். இதை பக்தர்கள் நேரில் பார்த்து தரிசனம் செய்ய அனுமதிக்கப் படுகிறார்கள்.

இந்த வருடம் ஆனித் திருமஞ்சனம் 28.06.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறவுள்ளது. அன்றைய தினம் முறைப்படி விரதம் இருந்து சக்தி உள்ளவர்கள் தில்லை சென்று ஸ்ரீ நடராஜரை தரிசிக்கலாம். முடியாதவர்கள் அருகில் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று மனமுருகவேண்டி ஆடலரசனின் அருளைப் பெறலாம்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

உ
ஸ்ரீராமஜெயம்

# திருமண வாழ்த்து

திரு.வி. சௌந்தர ராஜன் - திருமதி.சந்திரா சௌந்திரராஜன் அவர்களின் புதல்வி

**சௌபாக்கியவதி. பிரியதர்ஷினி** அவர்களுக்கும்

திரு.சுந்தரவரதன் அவர்களின் புதல்வன்

**சிரஞ்சீவி.லக்ஷ்மி நரஸிம்மன் (எ) விக்ரம்** அவர்களுக்கும்

**27.05.2020, புதன்கிழமை,**

**காஞ்சிபுரம் கொல்லா சத்திரத்தில் திருமணம் நடைபெற்றது.**

மணமக்கள் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு சீரோடும் சிறப்போடும் வாழ எம்பெருமானை வேதபாரதி குடும்பத்தினர்கள் சார்பாக வேண்டுகிறோம். மணமக்களை வாழ்த்துகிறோம்.

# தர்மத்தின் குரல்

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

### 2.14. இன்னும் சில கேள்விகள்: (தொடர்ச்சி)

*17. "பார்வை இழந்தவர்கள், செவி கேளாதவர்கள், முடவர்கள் முதலிய உடல் ஊனமுற்றோர்கள், பாவங்கள் செய்ய இயலாதவர்களாதலால், அதிர்ஷ்டமுடையவர்கள் என்று சொல்வது சரியாகுமா?"*

*அந்த அளவுக்கு அதிர்ஷ்டசாலிகள் என்று வேண்டுமானால் சொல்லலாம். புண்ணியம் அவர்கள் செய்ய முடியாதென்பதால், அந்த அளவுக்கு அவர்களும் துரதிர்ஷ்டசாலிகளே. வறுமை, நோய் பற்றியும் அதே போலத்தான். வறுமை, ஒருவனைத் தானம் செய்ய முடியாமல் தடுக்கிறது. நோய், ஒருவனைத் தவம் செய்ய முடியாமல் தடுக்கிறது. எனவே, ஒருவன் ஆரோக்கியமாக இருப்பதற்கு முழு முயற்சி செய்து, நன்றாகச் சம்பாதிக்க வேண்டும். இதுதான் சாஸ்திரம் சொல்லும் செய்தி, அறிவுரை.*

*18. "ஸ்வர்க்கம், நரகம் என்பதெல்லாம் வெறும் கற்பனைகள். இவ்வுலகில் சுகமாக நன்றாக வாழ்வதோ கஷ்டப்படுவதோ தான், ஸ்வர்க்கமும், நரகமும் ஆகும் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது சரியா?"*

*அது சரியல்ல, ஸ்வர்க்கத்தை அடைவதற்கு என்ன கர்மாக்களைச் செய்ய வேண்டும், எந்தக் கர்மாக்கள் நரகத்திற்கு அழைத்துச் செல்லும் என்பனவற்றைச் சாஸ்திரம் விவரமாக வர்ணிக்கிறது.*

*"இதை எந்த ஆதாரத்தில் நம்ப முடியும்?"*

*சாஸ்திரம் சொல்லுவதைக் கொண்டுதான் நம்ப வேண்டும். சாஸ்திரத்தில் இரண்டுவிதமான செய்திகள் உள்ளன. ஒன்று, ஆய்வுக்குச் சாதாரணமாகப் பயன்படும் வழிகளில் சரி பார்க்கப்படக் கூடியது.*

....தொடரும்

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 14



*தியான ஸ்லோகங்கள் தொடர்ச்சி...*

**5) வஸுதேவ ஸுதம் தேவம்**
**கம்ஸசாணூரமர்தனம்!**
**தேவகீபரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே**
**ஜகத்குரும்!!**

**பொருள் :** வசுதேவருடைய மகன் கம்சனையும் சாணூரனையும் கொன்றவன் பரமானந்தத்தைக் கொடுத்தவன் ஜகத்குரு, தேவன் ஆகிய கிருஷ்ணனை வணங்குகிறேன்.

**விளக்கம் :** இந்த ஸ்லோகமும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நமஸ்காரத்தை தெரிவிப்பதுடன் கீதாசாரியனின் பெருமையைக் காண்பிக்கிறது. பகவானை ''ஜகத்குரு, தேவன்'' என்று வர்ணிக்கிறார். உலகில் உள்ள எல்லோருக்கும் எல்லா காலத்திலும் எல்லா தேசத்திலும் ஒன்றுபோல் எல்லோராலும் கடைபிடிக்க உதவும் ஸனாதன தருமத்தை கீதை மூலம் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துரைத்த கிருஷ்ணனை ''ஜகத்குரு'' உலகத்திற்கு குரு என்று அழைக்காமல் என்னவென்று அழைப்பது? மிகப் பொருத்தமான விளக்கம்.

**6) பீஷ்மத்ரோணதடா ஜயத்ரதஜலா காந்தார நீலோத்பலா**
**சல்யக்ராஹவதீ க்ருபேண வஹனீ கர்ணேன வேலாகுலா!**
**அச்வத்தாம விகர்ண கோரமகரா துர்யோதனாவர்தினீ**
**ஸோத்தீர்ணாகலு பாண்டவைரணநதீ கைவர்தக: கேசவ:!!**

**பொருள் :** பீஷ்மர், த்ரோணர் முதலிய மஹாகுருக்கள் இரண்டு நதிகளாகவும், ஜயத்ரதன் அதில் ஓடும் ஜலமாகவும், காந்தார தேசத்து ராஜா நீலோற்பலம் எனும் பூவாகவும், சல்லியன் திமிங்கலமாகவும், க்ருபாசார்யாள் ஜலத்தின் ஒழுக்காகவும், கர்ணன் (அலையைத் தடுத்து நிறுத்தும்) தடுப்பாகவும், அஸ்வத்தாமன், விகர்ணன் முதலியோர் ராக்ஷஸ முதலைகளாகவும், துர்யோதனன் நீரிலுள்ள சுழலாகவும்

*அமைந்துள்ள யுத்த நதியைப் பாண்டவர்கள் மிக எளிதாக, கிருஷ்ணன் எனும் படகோட்டியின் உதவியால் கடந்தார்கள்.*

**விளக்கம் :** *இந்த ஸ்லோகத்தில் குருக்ஷேத்ர யுத்த பூமியை ஒரு நதியாக உருவம் அமைத்து அதில் கௌரவ சேனையில் இருந்தவர்கள் கரைகளாகவும் ஜலமாகவும் சுறா மீன்களாகவும் அலைகளாகவும் வர்ணித்து பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை ஒரு படகோட்டியாக கொண்டு அந்த நதியை கடந்தார்கள் என்று அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது.*

**7) பாராசர்யவச:ஸரோஜமமலம் கீதார்த்தகந்தோத்கடம்**
**நானாக்யானக கேஸரம் ஹரிகதா ஸம்போதனா போதிதம்!**
**லோகே ஸஜ்ஜன ஷட்பதைரஹரஹ: பேபீயமானம் முதா**
**பூயாத் பாரத பங்கஜம் கலிமல ப்ரத்வம்ஸின: ச்ரேயஸே!!**

**பொருள் :** *பராசர முனிவரின் புத்திரனாகிய வ்யாஸ பகவானின் வாயிலிருந்து வரும் உபதேசமாகிய ஜலப்ரவாஹத்திலிருந்து உருவாகிய மஹாபாரதம் எனும் தாமரை, கீதையின் மஹத்வமாகிய நறுமணத்தைச் சுமந்து, அதில் தந்துள்ள வ்யாக்யானங்களை அதன் உள்ளே உள்ள இதழ்களாகக் கொண்டு ஹரியின் கதையால் பூரணமாக மலர்ந்து, அதன் இனிப்பை மனமுவந்து பருகும் ஆறு கால்களுடைய தேனீக்களான உலகிலுள்ள ஸாத்வீக மக்கள், தங்கள் உள்ளங்களில் உள்ள மாலினத்தை அகற்றி நற்பணியில் ஈடுபட உதவட்டும்.*

**விளக்கம் :** *மஹாபாரத காவியத்தை ஒரு தாமரையாக உருவகித்து, வியாஸ பகவானின் வாயிலிருந்து வரும் உபதேசத்தை ஜலப்ரவாஹமாக நினைத்து கீதையிலுள்ள தத்வார்த்தங்களையும், அதிலுள்ள கதாஸாரத்தையும் தாமரைப் பூவின் இதழ்களாகவும் அமைத்து, அதிலிருந்து வரும் நறுமணத்தை கீதையின் மஹத்வமாகக் கொண்டு அதைக் கேட்கும் மனிதர்களுக்கு வண்டுகளாக உருத் தந்து இந்த அம்ருதத்தைப் பருகி, மனதிலுள்ள மாலினத்தைக் களைந்து உத்தம பதவியை அடைய உதவுவதாக மிக உருக்கமாகப் படம் வரைந்து காட்டியுள்ளார். கவியின் சாதுர்யமான இந்த சித்திரப் படைப்பு நமக்கு மிக எளிதாக அறிய உதவுவதாக அமைந்துள்ளது. ஒரே ஸ்லோகத்தில் முழுக்கருத்தையும் தந்துள்ளார்.*

*த்யான ஸ்லோகம் தொடரும்....*

# முதுமை - இனிய யதார்த்தம்!

*சென்ற மே மாத இதழில், கொரோனா காலகட்டத்தில் முதுமையில் தனிமை என்பது இரட்டை தண்டனை என்கிற சூழலிலும் சாமர்த்தியமாக சமாளித்து வரும் சிலரைப்பற்றிய ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன். படித்தவர்களில் சில வாசகர்கள் அதனைப் பாராட்டிப் பேசியதாக வேதபாரதியின் ஆசிரியர் தொலைபேசியில் தெரிவித்தார் மிக்க நன்றிகள். அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்த கவிதை போன்ற வரிகளையும் இந்த மாதம் வாசகர்கள் சிந்தனைக்கு பதிவு செய்கிறேன். உங்கள் விமர்சனங்களில் எந்தன் எழுத்து மெருகேறும் என்பதில் சந்தேகமில்லை.*

*முதுமை வரம் என்கிறார்கள் சிலர், சாபம் என்கிறார்கள் சிலர்!*
*சிந்தித்துப் பார்த்தால் சிக்கலின்றிப் புரியும். சிந்திப்போம்!*
*முதுமை, தவத்தினால் வேண்டிப்பெற்ற வரமுமில்லை*
*செய்த பாவங்களின் பலனாகத் திணிக்கப்பட்ட சாபமுமில்லை!*
*இப் பூமி செழிக்க இயற்கையும் இறைவனும் அளித்த இனிய யதார்த்தம்!*
*இதயம் திறந்து ஏற்றுக்கொண்டுவிட்டால், இயலாமை கூட இல்லாததாகிவிடும்!*
*தள்ளாமை கூடத் தள்ளிப் போய்விடும்!*
*அவைகள் கூடினால் தான் என்ன?*
*ஐம்புலன்களின் திறன்களும் குறைந்தால் என்ன?*
*நோயுற்ற இவ்வுடல் சிதைந்தால்தான் என்ன?*
*ஐந்தறிவு பெற்ற உயிரினங்கள் புலம்பித்திரியாத போது*
*ஆறறிவு பெற்ற மனித குலம் மட்டும் அழுது புலம்புவதேன்?*
*முதுமையின் மறுபக்கம் பார்க்க மறுக்கும் விந்தை மனிதர்கள்!*
*அன்று சிந்திய உங்கள் வியர்வைத் துளிகள்*
*வெற்றி விளைச்சல்கள் நாங்கள்' என்று நம்மை*

*ஆசையாய் அரவணைத்து, ஆனந்தமாய் கொண்டாடி,*
*பரிவுடன் நம் பாதம் தொட்டு வணங்கி,*
*நேசமாய் நம் ஆசிகளை விழையும்*
*நம் மழலைச் செல்வங்கள் உற்பத்தி செய்யும்*
*உயிர் தருணங்கள் முதுமையின் அருளல்லவா?*
*பெற்ற செல்வங்களைக் குறைகூறி ரணப்படுத்தத்*
*தேவையில்லை!*
*உற்ற உறவுகளை குற்றப்படுத்தி தள்ளி நிறுத்தவும்*
*தேவையில்லை!*
*சிநேகங்களை சந்தேகிக்கவும் உரிமையில்லை!*
*அவரவர் வாழ்க்கை அவரவர் கைகளில்! பந்தயக்*
*குதிரைகள் போல்*
*காலத்தின் மின்னல் வேகத்திற்கு, ஓடிக்கொண்டே இருக்கும்*
*யாருக்கும், நின்று நிதானிக்க நேரமில்லை!*
*கூடிக்களித்திருக்க மனமிருந்தும் மார்க்கமில்லை*
*இது காலத்தின் கட்டாயம் கலி காலத்தின் நிதர்சனம்.*
*தூரத்துப் பச்சை கண்களுக்கு அழகு, தூரத்து உறவுகள்*
*பாசத்திற்கு அழகு!*
*வானப்ரஸ்தம் படிப்போம், பழகுவோம், பயன்படுத்துவோம்!*
*அருண்டவன் கண்களுக்குத்தான் இருண்டதெல்லாம் பேய்!*
*தெளிந்தவன் கண்களுக்குத் தெரியுமே தூரத்து ஒளிக்கீற்று!*
*முதுமை என்பது வரமுமில்லை, சாபமுமில்லை!*
*இறைவனை நோக்கிய இனிய பயணத்தின் வெளிச்சப்*
*பாதை சான்று!*
*ஒரு முகமாய் மனதை அவனது கமலமலர் பாதத்தில் இருத்திக்*
*காத்திருப்போம் காலம் கனிந்துவர,*
*பற்றது நீங்கி, பட்டமரமாய் மண்ணில் சாய்ந்து,*
*விண்ணில் கலந்து, வேறொன்றாய் மீண்டும் பிறந்து,*
*இனிப் பிறவா வரம் வேண்டுவோம்!*

**- டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன்.**

**வானப்ரஸ்தம்** - *ஆர்.பி.வி.எஸ் மணியன் அவர்கள் எழுதியது. அனைவரும் படித்து பின்பற்ற வேண்டிய அற்புதமான நூல்.*

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்தரரின் திவ்ய சரித்திரம்

*மதுரை மாநகரில் சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மோக்ஷ இண்டி சோமநாத அவதாணி என்பவருக்கும் அவர் மனைவி பார்வதி தேவிக்கும் பல வருடங்கள் தவ வாழ்க்கைக்கு பிறகு ஸத்புத்திரன் பிறக்க ராமேஸ்வரம் ராம நாத ஸ்வாமி அருளால் சிவராம கிருஷ்ணன் என்னும் திருநாமத்துடன் ப்ரம்மேந்திரர் அவதரித்தார்.*

*ஸ்ரீ ப்ரம்மேந்திரர் தன் சமகாலத்தவரான ஸ்ரீ போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளையும், ஸ்ரீ ஸ்ரீதர வெங்கடேசர் ஆகியோரை பல சமயங்களில் சந்தித்து இருக்கிறார். ஸ்வாமிகளும், ஐயாவாளும் கலியில் ராமஸ்மரணையே கதி என்று ப்ரசாரம் செய்து வந்தனர். அதன் தாக்கமாக ஸ்ரீ ப்ரம்மேந்திராளும் நாம சங்கீர்த்தனத்திற்கு ஏதுவாக லகுவாக கீர்த்தனங்களை இயற்றியிருக்கிறார்.*

*மிக இளம்வயதில் சிவராம கிருஷ்ணனை வேத பாடசாலைக்கு அனுப்பினார்கள். கற்றபின் மேற்படிப்பிற்கு திருவிச நல்லூரில் உள்ள வேத வித்தகர்களிடம் பயில வேண்டி 1693-ம் ஆண்டு திருவிச நல்லூரில் ஸ்ரீ ராம பக்த தீக்ஷதர் என்பவரிடம் குருகுல வாசம் செய்ய வந்தார். தாயார் அழைப்பில் மதுரை செல்ல அவரின் பூர்வ ஜென்ம புண்யத்தால் மனதில் தெளிவு பெற ப்ரஹ்மசரியத்தில் இருந்து ஸந்நியாச ஆசிரமத்திற்கு செல்ல தெளிவு பெற்றார். பின்னர் தன் குருவிடம் திரும்பிச் சென்று அவரின் வழிகாட்டுதல்படி ஸ்ரீபரமசிவேந்திரர் தீக்ஷை கொடுக்க ஸதாசிவம் ஆனார்.*

*தர்க்க சாஸ்த்திரத்தில் தேர்ச்சி பெற்ற ஸதாசிவம் தன் சக மாணவர்களை பலவித கேள்விகளால் திக்குமுக்காடச் செய்து தோல்வியுற செய்வார். அவர்கள் குருவிடம் தெரிவிக்க குருவின் ஆணையாக அன்று முதல் மௌனவிரதம் மேற்கொண்டார். குருவிடம் கற்ற மந்திரயோகம் பரிசயோகம், பாவசீயோகம், அபாவயோகம், மஹாயோகம் முதலியவற்றால் ஹம்ஸ தியானத்தில் துரீய நிலை அடைந்து பல சித்திகள் அடைந்தார்.*

*இந்த சித்திகள் கைவரப்பட்ட பின் தான் அவதூதராக ஸ்ரீ ஸதாசிவேந்திரர் கண்ணுக்கு புலப்படலானார். காடு, மலை, வனாந்திரங்களில் அவதூதராக, உன்மத்தராக சஞ்சரித்திருக்கிறார். பல அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார் என்று கர்ணபரம்பரையாக செய்திகள் இன்றும் உலா வருகின்றது. அவற்றில் சிலவற்றை பார்க்கலாம்.*

*கரூருக்கு அருகில் கொடுமுடி என்ற ஊர் காவிரிக்கரையில் உள்ளது. காவிரியின் நடுவில் அகத்தியம்பாறை என்ற பாறையில் அமர்ந்து த்யானம் செய்தபோது, காவிரியில் வெள்ளம் பெருகி, அவரைத் தள்ளி மணல் மேடு போட்டு மூடிவிட்டது. பல வருஷங்களுக்கு பிறகு வீடு கட்ட மணல் வேண்டி தோண்டிய போது அவர்மேல் பட்டு, உணர்ச்சி உண்டாகி எழுந்து நடந்து சென்றுவிட்டார்.*

*கி.பி. 1732 முதல் 1750 வரை புதுக்கோட்டை ராமனாதபுரம் இடையே ஏற்பட்ட பகையால் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். காட்டில் வெட்டிய விறகுகளை தூக்கிச் செல்ல பணித்தனர் அதிகாரிகள். வீட்டில் இறக்கியதும் அவை தீப்பிடித்து எரிந்தது. தவறை உணர்ந்து நமஸ்கரித்தவுடன் தீ அணைந்து பிறகு பலமடங்காக பெருகியது.*

*தஞ்சாவூருக்கு அருகில் புன்னை வனக்காடுகளில் அமர்ந்திருந்த போது, தஞ்சாவூர் மஹாராஜா ஸஹாஜியின் பெண் குழந்தைக்கு உஷ்ணத்தினால் கண்ணில் இருந்து ரத்தம் வந்தது. சமயபுரம் மாரியம்மனுக்கு வேண்டிய போது, மஹாராஜாவின் கனவில் அம்மன் தான் இங்கேயே இருக்க சமயபுரம் போவானேன் என்று அருளினார். ஸ்வாமிகளிடம் கேட்டு அவருடைய கைகளால் செய்து ஜன ஆகர்ஷன சக்ரம் எழுதி ப்ரதிஷ்டை செய்ய குழந்தைக்கு நோய் நீங்கியது.*

*ஸதாசிவப்பிரம்மம் பஞ்சயோக சித்தி பெற்ற பின் தன்னுடன் இளமை பருவத்தில் கல்வி கற்ற ஸ்ரீபோதேந்திராளை சந்திக்க நினைத்து கோவிந்தபுரம் அருகே வந்தடைந்தார். காவேரிக்கரையில் நாணற் புதரில் படுத்துவிட்டார்.*

*தொடரும்.....*

**ஸ்ரீராமன்,** *வேளச்சேரி.*

## வாசகர் கடிதம் :

வேதபாரதி மே 2020 இதழில் தர்மத்தின் குரல் கட்டுரையில் ஸ்ரீபாரதி ஸ்வாமிகள் "வாழ்வில் நன்னடத்தையுடன் கூடிய இறைநம்பிக்கையே இன்று மிகவும் "முக்கியம்" என்பதை தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள். அருமை. ராம் ராம்.

திருச்சி K .கணேசன், 9442575483

1. அருமையான பணி அமிதாப் அவர்களே, மிகவும் பயனுள்ள கட்டுரை - **Dr.T.P. ரவி**

2. மனித வாழ்க்கையின் நடைமுறைப் பிரச்சினைகளையும் தீர்வுகளையும் சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தீர்கள் தோஷி.

**Dr.A.B.மௌலானா**

3. ஸ்ரீமத் பகவத் கீதை (பகுதி 13) படித்தேன் - கீதையை எழுதிய வ்யாஸ பகவானின் பெருமையை சொல்வது - குரு இல்லாமல் எதுவும் நிகழாது என்பது புரிகிறது. படித்தேன் ரசித்தேன்.

**நடராஜன்,** பாண்டி

## எந்தரோ மஹானுபாவலு அந்தருக்கு வந்தனமுலு

நேற்று இரவு 18, மே, திங்கட்கிழமை, தெலுங்கு சம்பிரதாய சந்தியாவந்தன வகுப்பில் கலந்துகொண்டேன். நான் அங்கு வகுப்பில் சொல்ல நினைத்ததை தற்போது பதிவிடுகிறேன்.

இப்பொழுது இந்த 3 நாள் பயிற்சியில் முழுவதுமாக என்னை நான் ஈடுபடுத்திக் கொண்டதால், இயந்திர கதி வாழ்க்கையில் ஒரு இயந்திரமாக இருந்த எனக்கு இயந்திரத்திற்கு (ஓவர்ஆல்) செய்தது போல இருந்தது. உபநயனம் செய்து முடித்த பொழுது கனபாடிகள் எப்படி நமக்கு புதியதாக சந்தியாவந்தனம் கற்றுத் தந்தார்களோ அதைப்போல இருந்தது நமது கனபாடிகள் அவர்கள் நமக்கு கற்றுக்கொடுத்தது இது நமக்கு முழு புத்துணர்ச்சியையும், முழு நம்பிக்கையையும் கொடுத்துள்ளது. வேதபாரதிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். கனபாடிகளுக்கு நமஸ்காரங்கள்.

**ஸ்ரீ ரவிச்சந்திரன்,** பாண்டிச்சேரி

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# ஆத்மஞானம் அடைவதற்கு வேண்டிய தகுதி



சுவர்க்க பதவியை அடைவதற்காக விச்வஜித் என்னும் யாகத்தை வாஜஸ்ரவசர் என்பவர் நிகழ்த்தினார். அந்த யாகத்தைச் செய்பவர் தன்னிடமுள்ள பொருட்களையெல்லாம் தானம் செய்துவிட வேண்டும் என்பது நியதி. அவருக்கு நசிகேதன் என்று ஒரு மகன் இருந்தான். ஸ்ரத்தையின் மறு உருவமாய்த் திகழ்ந்த அவன், தனது தந்தை புரோகிதர்களுக்கு அளிக்கும் மலடு தட்டிய கிழட்டுப் பசுக்களைப் பார்த்து திகைத்து நின்றான். தனது தந்தையின் வேள்வியில் ஏற்பட்ட இக்குறையை ஈடுகட்டுவதற்கு, மகன் என்ற முறையில் தான் ஏதாவது செய்தே தீர வேண்டும் என்று நசிகேதன் எண்ணினான். தன்னையே தானமாகக் கொடுப்பதற்கு தான் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அவன் முடிவெடுத்தான். எனவே, அவன் தனது தந்தையை அணுகி, “நீங்கள் என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கப் போகிறீர்கள்?” என்று கேட்டான். வாஜஸ்ரவசர் அவனைச் சட்டை செய்யவில்லை. மூன்றாவது முறையாக நசிகேதன் இதே கேள்வியைக் கேட்டதும், வாஜஸ்ரவசர் கோபமாக தன் மகனைப் பார்த்து, “உன்னை யமனுக்கு அளிக்கிறேன்” என்று கூறினார்.

“என் தந்தை, ஒரு பேச்சுக்காக இத்தகைய வார்த்தைகளைக் கோபத்தில் கூறியிருந்தாலும், அவை பொய்யாவதற்கு அனுமதிக்கக் கூடாது” என்று நசிகேதன் நினைத்தான். அச்சிறுவன் யமலோகத்தைச் சென்றடைந்தான். அங்கே யமன் இல்லாததால், நசிகேதன் பொறுமையாக மூன்று நாட்கள் யமனுக்காக வாசலிலேயே காத்திருந்தான். வெளியில் சென்றிருந்த யமன் திரும்பி வந்ததும், அச்சிறுவனை தான் மூன்று

*நாட்கள் காக்க வைத்ததால் வந்த பாவத்தை போக்கிக் கொள்வதற்காக அவனுக்கு மூன்று வரங்களை அளித்தார்.*

*மூன்றாவது வரமாக, இறந்த பிறகு, உடல், இந்திரியங்கள் மற்றும் மனம் ஆகியவைகளிலிருந்து வேறுபட்ட ஆத்மா என்று ஒன்று இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதைப் பற்றித் தான் தெரிந்துகொள்ள விரும்புவதாக நசிகேதன் யமனிடம் கோரினான். ஆத்மாவைப் பற்றி போதிப்பதற்கு முன், அதற்கு வேண்டிய தக்க மனவுறுதியுடன் நசிகேதன் இருக்கின்றானா என்று அவனைப் பரீட்சை செய்வதற்காக, யமன் அவனைப் பலவிதங்களில் ஆசை காட்டி மயக்கிப் பார்த்தார்.*

*தொடரும்....*

*வேளச்சேரி சத்சங்கங்கள் சார்பில் 45 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. சுகாதாரப்பணியாளர்கள், திருக்கோயில் சிப்பந்திகள், சலவைத் தொழிலாளர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் பெரும் பேறு கிடைத்தது. ஆலயங்களின் கூட்டமைப்பு பொறுப்பாளர் சிவத்திரு குமாரராஜா முன்னின்று ஏற்பாடுகளை செய்தார்கள்.*

*பள்ளிக்கரணை ஸ்ரீ சௌபாக்யா ரமேஷ், பொறுப்பெடுத்து தனது பகுதியில் உள்ள பயனீட்டாளர்களுக்கு விநியோகம் செய்தார்கள்.*

*இந்தப் பணியில் ஸ்ரீ ராமன், ஸ்ரீ ரமேஷ், ஸ்ரீ சத்வித்யா ஸ்தானம் டிரஸ்ட் ஸ்ரீ முனீஸ்வர மாமா, வேதபாரதி வெங்கட்ராமன் ஆகியோர் பங்கேற்றார்கள்.*



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



V Krishnamoorthy
Managing Trustee



P.Akashram
Executive Trustee

ஸ்ரீ மாதா டிரஸ்ட், அடையாறு கேன்சர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுக் கொள்ள வரும் ஏழை புற்றுநோயாளிகளை அரவணைத்து அவர்களுக்கு, ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் நம்ம தர்மசாலாவில் உணவும், உறைவிடமும் முற்றிலும் இலவசமாக வழங்கி வருவதை தாங்கள் அறிவீர்கள்.

ஏழை புற்றுநோயாளிகளை காக்கும் தனது இருபது ஆண்டு கால சேவை பயணத்தில் ஸ்ரீ மாதா டிரஸ்ட், இறைவன் அருளாலும், மனிதநேயம் மிக்க உங்களைப் போன்றோரின் உதவியாலும், இதுவரை ஒரு நாள், ஒரு வேளை கூட ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு வழங்காமல் இருந்ததில்லை.

ஆனால், தற்பொழுது கொரோனா என்னும் கொள்ளை நோயின் தாக்கத்தால் ஊரடங்கு நிலை இருப்பதால், நம்ம தர்மசாலாவில் தங்கியிருந்த ஏழை புற்றுநோயாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் (150 பேர்) அனைவரையும் அவரவர் ஊர்களுக்கு ஒரு மாதத்துக்குரிய மருந்து செலவுக்கானத் தொகையை அளித்து, ஊரடங்கு முடிந்த பின்னர் வழக்கம் போல் உங்களது சிகிச்சை காலங்களில் இங்கு வரலாம், உங்கள் நலன் காக்க, உங்கள் தாய்வீடான நம்ம தர்மசாலாவின் கதவுகள் என்றென்றும் திறந்தே இருக்கும் என்கிற நம்பிக்கை வார்த்தைகள் கூறி, அவர்களை தனி வாகனங்கள் மூலம் பத்திரமாக அனுப்பி வைத்துள்ளோம்.



நம்ம தர்மசாலாவில் ஏழை புற்றுநோயாளிகள்

# கொரோனா காலத்தில் மக்கள் பணியில் "ஸ்ரீ மாதா டிரஸ்ட்"



மக்கள் பணியில் நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ணமூர்த்தி

**வறியவர்கள் என்றென்றும் ஸ்ரீ மாதா டிரஸ்டின் அன்புக்கு உரியவர்களே...** அன்றாடம் உழைத்து உண்ணும் எளிய மக்கள் கரோனா ஊரடங்கு காலத்தில் உழைப்பும் இன்றி பிழைப்பும் இன்றி மிகுந்த இன்னலுக்கு உள்ளாகினர். அத்தகைய இக்கட்டான சூழ் நிலையில் எளிய மக்களின் உணவுத்தேவையை சற்றேனும் நிவர்த்தி செய்திட நினைத்த ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் திரு.



மக்கள் பணியில் அறங்காவலர் திரு ராஜா கே.மூர்த்தி



மக்கள் பணியில் அறங்காவலர் திருமதி பாமா வெங்கட்

கிருஷ்ணமூர்த்தி அவர்கள், கிழக்கு தாம்பரம் பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள், நடைபாதைவாசிகள், மாற்றுத்திறனாளிகள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், கொரோனா காலத்திலும் அயராது உழைக்கும் நமது அன்புக்குரிய தூய்மைப் பணியாளர்கள் என சமுதாயத்தின் அடித்தட்டு மக்கள் அனைவரையும் கிழக்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக



மக்கள் பணியில் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி திருமதி ரமா

அலுவலகத்திற்கு வரவழைத்து அவர்களுக்கு ஐந்து கிலோ தரமான

அரிசியினை ஸ்ரீ மாதா டிரஸ்ட் சார்பில் இன்று வரை வழங்கிக் கொண்டிருக்கிறார். இது வரை சுமார் 10000 கிலோ அரிசி வழங்கப் பட்டுள்ளது. கொரோனா தொற்று முற்றிலும் நீங்கும் வரையிலும், ஊரடங்கு முற்றிலும் தளர்த்தப்பட்டு எளிய மக்கள் தங்களின் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் வரையிலும் ஸ்ரீ மாதா டிரஸ்டின் இச்சேவை தொடர்ந்து நடைபெறும்.



மோடி கிச்சன் சேவையில் திரு ராஜா கே.மூர்த்தி

## பல்வேறு திசைகளிலும் பசிப்பிணி தீர்த்த ஸ்ரீ மாதா டிரஸ்டின் நேசக்கரம்

### மோடி கிச்சன் (கிழக்கு தாம்பரம்)



கிழக்கு தாம்பரத்தில் இயங்கி வரும் இரண்டு மோடி கிச்சன்களுக்கும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் சார்பில் அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் பொருட்கள் நாள்தோறும் வழங்கப் பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 2000 பேர் தினமும் மதிய உணவு பெற்று பசியாறுகிறார்கள்.

### இருளர் காலனி (மாமண்டூர்)



இருளர் காலனியில் வாழும் குடும்பங்களுக்கு **ஸ்ரீ மாதா டிரஸ்ட்** சார்பில் அரிசி, மளிகைப் பொருட்கள் மற்றும் காய்கறிகள் அடங்கிய தொகுப்பு, நமது அறங்காவலர் திரு "வளசை" ஜெயராமன் அவர்களின் மேற்பார்வையில் வழங்கப்பட்டது.

**பள்ளிப்பட்டு (யோகி கார்டன் அருகில்)**



ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் ஏழை புற்றுநோயாளிகளின் ஒப்பற்ற புகலிடமான **நம்ம தர்மசாலா** அமைந்துள்ள பகுதியில் வசிக்கும் எளிய மக்களுக்கு **ஸ்ரீ மாதா டிரஸ்ட்** சார்பில் 5 கிலோ தரமான அரிசி நமது ஒருங்கிணைப்பாளர் திரு "யோகி" **இராஜேந்திரன்** அவர்களின் மேற்பார்வையில் வழங்கப்பட்டது.



**துக்கம் எங்கே உண்டோ, அங்கே நாம் வலுவில் போய், அந்த துக்க நிவிருத்திக்கு நம்மால் ஆகக்கூடியதை எல்லாம் பண்ண முயலவேண்டும்...!**

**ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா**

**எளிய மக்களின் பசியாற்றிடும் புனித சேவையில் ஸ்ரீ மாதா டிரஸ்டுடன் இணைந்து பயணிக்க விரும்பும் நல்ல உள்ளங்கள் எங்களை தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.**

Kindly send your contribution by CHEQUE / NEFT

Account Name : SRI MATHA TRUST
Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20
Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020.
Tel:044-24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113.
Tel: 044-4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.

Mobile: 9500001065 / 9381020727 / 9003247857
vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## ஒன்றே பலவாக



ஒரே பரமாத்மாதான் பல தேவதா மூர்த்திகளாகியிருக்கிறார். ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொரு மூர்த்தியிடம் அலாதிப் பிடிமானம் உண்டாகிறது. அவனவனுக்கும் அந்தப் பிடிப்பையே உறுதிப்படுத்திக் கொடுப்பதற்காகப் பரமாத்மா தம் ஸ்வரூபத்தில் ஒன்றை இன்னொன்றிடம் ஒரு சமயத்தில் குறைத்துக் கொள்கிறார். தஞ்சாவூர் சீமையிலேயே எடுத்தக் கொண்டால் : திருக்கண்டியூரில் பரமசிவனை மஹாவிஷ்ணுவுக்கு முன்னால் குறைத்துக் கொள்கிறார். பிரம்ம சிரஸைக் கிள்ளியதால் பரமேசுவரனுக்கு ஏற்பட்ட சாபத்துக்கு அவர் மஹாவிஷ்ணுவிடம் சாப விமோசனம் பெறுகிறார். அடுத்தாற்போல் திருவீழிமிழலையில் அந்த மஹா விஷ்ணு பரமசிவனுக்கு முன்னால் குறைத்தாற்போல் இருக்கிறார். அங்கே விஷ்ணு சிவனுக்குப் பூஜை பண்ணுகிறார். ஒவ்வொரு கமலமாக சிவ ஸஹஸ்ர நாமம் சொல்லி அர்ச்சனை செய்கிறார். கடைசியில் ஒரு கமலம் குறைகிறது. உடனே புண்டரீகாக்ஷனான (தாமரைக் கண்ணனான) பெருமாள் தம் கண் ஒன்றையே பறித்து ஈசுவரனுக்கு அர்ச்சனை செய்கிறார். ஈசுவரன் பிரஸன்னமாகி அவருக்குச் சக்கரம் வழங்குகிறார். இங்கே நேத்ரார்ப்பணேச்வரர்'' என்றே ஈச்சுவரனுக்குப் பெயர். கண்டியூரில் பெருமாளுக்கு ஹர சாப விமோசனர்'' என்று பெயர். கண்டியூர் கதையைக் கேட்கிறபோது பெருமாள் மகாபாரதத்தையும் சாபத்தையும் போக்குகிற பரம கருணாமூர்த்தி என்ற பாவத்தை, ஸாரத்தைத்தான் நாம கிரகிக்க வேண்டும். அப்படியே திருவீழிமிழலைப் புராணத்தில், தன் கண்ணைக்கூடத் தயங்காமல் கொடுக்கிறதுதான் பக்தி என்னும் ஸாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். எவரைவிட எவர் உசத்தி அல்லது தாழ்த்தி என்று பார்ப்பதை முக்கியமாய் நினைக்கக்கூடாது.

முன்பெல்லாம் லாந்தர் விளக்குகள் தாம் இருந்து வந்தன. அதில் நாலு பக்கம் கண்ணாடி போட்டதும் உண்டு; முப்பட்டை மாதிரி மூன்று பக்கம் கண்ணாடி போட்டது மாதிரியும் உண்டு. நாம் இந்த முப்பட்டை லாந்தரைப் பார்ப்போம். கண்ணாடிக்குள்ளே விளக்கு ஏற்றி வைத்திருக்கும். அதன் ஒளி மூன்று பக்கத்தாலும் கண்ணாடி வழியாக வெளியே வரும். சில சமயங்களில் அலங்காரமாக, இந்தக் கண்ணாடி ஒவ்வொன்றுக்கும் ஒரு வர்ணம் பூசியிருப்பார்கள். உள்ளேயிருக்கிற ஒரே ஒளி அந்தந்தப் பக்கத்துக் கண்ணாடி வழியாக வருகிறபோது அதன் வர்ணமாகத் தெரியும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற மூன்று காரியங்களை ஒரே பரமாத்மா பண்ணுகிறது. ஒரே சைதன்யம் (அறிவொளி) தான் மூன்றுக்கும் காரணம். அந்த சைதன்யம் முப்பட்டை லாந்தருக்குள் இருக்கிற விளக்கு மாதிரி.

மூன்று பட்டையில் ஒன்றுக்குச் சிவப்புக்கலர் பூசியிருக்கிறது. அதுதான் சிருஷ்டி, ஸ்பெக்ராஸ்கோப்பில் சுத்த வெளிச்சத்திலிருந்து சிவப்பைப் பிரித்தால், பாக்கி ஆறு கலர்களும் கூடப் பிரிந்து வந்துவிடும். ஒன்று பலவாக ஆகிற சிருஷ்டி இதுதான். அதனால் தான் சிருஷ்டி கர்த்தாவான பிரம்மாவைச் சிவப்பு நிறமாகச் சொல்வது. முப்பட்டைக் கண்ணாடியில் இன்னொன்று நீலம் ஸயன்ஸ்படி நிற மாலையின் கடைசியில் உள்ள "வயலெட்" அதுதான். ஆரம்பம் சிவப்பு முடிவு வயலெட் சிருஷ்டிக்கப்பட்ட லோகத்தையெல்லாம் பரிபாலித்துக் கொண்டிருக்கும்போதே "இந்த லோகம் என்பது தன்னில் தானே நிறைந்த பூர்ண சத்தியம் இல்லை; இது பரமாத்மாவின் வேஷம்தான். அவருடைய லீலைதான்" என்று ஞானத்தினால் காட்டிக் கொண்டிருக்கிறவர் மஹாவிஷ்ணு. அந்த ஞான அக்னியில் லோகமெல்லாம் கரியாகிறது. ஒரு வஸ்து அடியோடு நீற்றுப் போய்விடாமல் தன் ரூபத்தோடேயே ஆனால் தன் வர்ணத்தை இழந்து, கரிக்கட்டையாக நிற்கிற நிலை இது! லோகம் என்று ஒன்று இருக்கவும் இருக்கிறது; ஆனால் அதன் தனி குணம்-மாயை-எரிந்து, கரிந்து அதுவும் விஷ்ணு மயமே என்று தெரிகிறது.

தொடரும்....

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 2 பகுதி - 45

“ஒற்றைத் தலைமை” என்பது சரியா, தவறா என்று இன்றளவும் உலகம் விவாதித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் பல குடும்பங்களில் இன்று “அம்மா அல்லது அப்பா மட்டும்’ எனும் நிலைமை பல காரணங்களினால் உள்ளது. காரணங்களை ஒதுக்கிவிட்டு குழந்தைகளின் நிலையைக் காணலாம்.

சேர்ந்து வாழ்ந்து வளர்ப்பதே பெரும்பாடு எனும் நிலையில் (Single Parent) எனப்படும் ஒற்றையாக குழந்தைகளை வளர்ப்பது மிகவும் கடினமானது, கொடுமையானது.

மனைவியாக இருந்தால் கணவரின் கடமையையும் செய்ய வேண்டும். கணவனாக இருந்தால் மனைவியின் கடமையையும் சேர்த்து செய்ய வேண்டிய கட்டாய நிலை. பளு மிக அதிகம். எவ்வித தவறும் சிறிதளவும் செய்யாமல் வளர்ப்பது சுலபமா?

குழந்தைகளை ஈர களிமண்ணுக்கு ஒப்பிடலாம். நீங்கள் அவர்களை உருவாக்குவதற்காக காத்திருக்கிறீர்கள்.

முதலில் "Single Parent (SP)"என்றால் மனமும் அதனால் உடலும் தளர்ச்சியடையும். உடல் நலம் பேணுவது உங்களின் தலையாய கடமை. சுவரிருந்தால் தான் சித்திரம் வரைய இயலும்.

உங்கள் மனதில் கோபம், வெறுப்பு, துக்கம், அலுப்பு, சலிப்பு இருக்கக்கூடும். அதை உங்கள் ‘டீன் ஏஜ்’ குழந்தைகள் புரிந்து கொள்ள இந்த வயதில் இயலாது. எக்காரணம் கொண்டும் மற்றவரை இகழாதீர்கள். கணவன் - மனைவி உறவு என்பது வேறு ஆனால் தாயாக - தந்தையாக குழந்தைகளுடன் இருக்கும் உறவு முறை வேறு.

எக்காரணம் கொண்டும் தனிமையில் உங்களையும், குழந்தைகளையும் அடைத்துக் கொள்ளாதீர்கள். ஏதாவது நல்ல கூட்டத்தோடு (பஜனை - எழுத்து - பாட்டு - இலக்கியம்) இணைந்துக் கொள்ளுங்கள்.

*யாரோடும் சுலபமாக பழகும் தன்மை உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் உங்கள் குழந்தையின் தன்மையை அறிந்து கொண்டு அதற்கேற்றார் போன்ற கூட்டத்தோடு இணையுங்கள்.*

*வாரம் ஒரு நாள் செல்வதால் ஏற்படும் உடல் மற்றும் மன நலத்திற்கு இணையேதுமில்லை. வீடு, ஆபீஸ் என்று நீங்கள் ஓடுபவராக இருந்தால் அட்டவணை தயாரித்து அதன்படி மிகச்சரியாக உங்கள் நேரத்தை செலவிடுங்கள். அப்பொழுது தான் எதைச் செய்தாலும் அதைச் சரியாக செய்வீர்கள். முக்கியமாக குழந்தையுடன் செலவிடும் நேரம்.*

*மாதம் இரண்டு முறை அல்லது ஒரு முறை உங்கள் பட்ஜெட்டிற்கு ஏற்றார் போல் வெளியே அழைத்துச் செல்லுங்கள். மனம் விட்டு பேச மட்டுமல்ல. மகளாக இருந்தால் வெளிவட்டாரத்தில் நடந்து கொள்ளும் விதம், மகனாக இருந்தால் அவன் நடந்து கொள்ளும் விதம் என்ன என்பதை கண்டு சரி செய்ய வேண்டிய இடத்தில் சரி செய்யலாம்.*

*உங்கள் குழந்தைக்கு பிடித்த மாதிரியான ஏதாவது ஒரு கிளாஸில் சேர்த்துவிடுங்கள். உங்கள் பட்ஜெட்டிற்கு ஏற்றவாறு அவன் / அவள் கேட்பது இருந்தால் தயங்காமல் எடுத்துக் கூறி, வேறு என்ன செய்யலாம் என்று மனம் விட்டு பேசுங்கள்.*

*கிளாஸிற்கு அனுப்பிவிட்டு அங்கும் முதலாவது மாணவன் / மாணவியாக வரவில்லையே என்று அழுத்தம் கொடுக்காதீர்கள். நீங்கள் தான் பணம் கட்டுகிறீர்கள், அங்கு செல்வது மனபாரத்தை மறந்து மகிழ்ச்சியுடன் உங்கள் குழந்தை இருக்க என்று புரிந்து செயல்படுங்கள். உங்களுடன் மட்டுமே பழகுவது தவறு. மற்றவர்களோடு பழகுவதும் மிக, மிக, முக்கியம்.*

**“இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்”**

*(அதிகாரம்-63-இடுக்கணழியாமை - குறள் 623)*

*“துன்பம் வந்த போது அதற்காக வருந்தி கலங்காதவர் அத்துன்பத்திற்கு துன்பம் உண்டாக்கி வென்றுவிடுவர்’’ என்கிறார் வள்ளுவர்.*

தொடரும்....

# கம்பராமாயணம்

## என்னை மிகவும் கவர்ந்த கம்பராமாயண உட்கதைகளுள் ஒன்று உங்களுக்காக :

*அயோத்தியில் தசரத மஹாராஜா ஒரு நாள் பின்னிரவு அரண்மனையில் அறையில் ஓய்வுற்றிருக்கும் நேரத்தில் கண்ணாடி முன்னே நின்றார். அப்பொழுது தன் காதோரம் எட்டிப் பார்த்த முதல் நரைமுடியைக் கண்டார். நரைமுடியைக் கண்ட அந்தத் தருணம், ராஜா தன் அரசவை பொறுப்புகளை ராமனிடம் ஒப்படைக்க முடிவு செய்கிறார். இராமனுக்கு தன் கண்கள் பனிக்க முடிசூட்டி, தான் வானப்ரஸ்தத்திற்கு முற்பட விழைகிறார்.*

*அக்கணமே அரசவையைக் கூட்டி, தன் எண்ணத்தைப் பகிர்ந்து கொண்டார். அயோத்ய அரசவையில் உள்ள மேன்மக்களோ "இரண்டு கன்றுக்கு ஏங்கும் பசு போல" உணர்ந்தார்கள். அதாவது தசரத மன்னனின் ஒப்பில்லாத ஆட்சி முடியப் போகிறதே என்ற வருத்தமும், ஆனால் இராமனைப் போல் அனைத்து ஒழுக்கத்திலும் மேம்பட்டு இருக்கும் ஒருவன் அரசாளப் போகிறானே என்ற மகிழ்வும் ஒரே சமயத்தில் அரசவையில் அனைவரும் சூரியனைப் போலே ஒளிரும் இராமனுக்கு முடிசூட்ட ஒத்தாற்போல சம்மதம் தெரிவித்தனர். தசரதரோ அரசவையின் இராஜகுருவான வசிஷ்டரின் ஒப்புதலுக்கு காத்து இருந்தார்.*

*அச்சமயம் மௌனம் கலைத்த வசிஷ்டர் "சீதை மண்ணினும் நல்லாள், மலர்மகள், கலைமகள்" சீதையை மண முடித்ததனால் இராமன் அரசாள அனைத்துத் தகுதிகளையும் பெற்றுவிட்டான் என்கிறார்.*

*இதைக்கேட்ட தசரதரின் மனம் குளிர்ந்தது. இராமனின் நல்லொழுக்கங்களும், உயர்குணமும் எல்லோரும் அறிந்ததே. ஆனால் சீதையை போன்ற உத்தமமானவள் உடன் இருப்பதால் இராமனின் நாடாளும் திறன் பன்மடங்கு உயரும் என்பது வசிஷ்டரின் கருத்து.*

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

*என்ற குறளிற்கேற்ப தன் இல்லத்திற்கு மட்டுமன்றி ஒரு நாட்டையே ஆளும் பொறுப்பை நிர்ணயம் செய்யக் கூடிய இடத்தில் ஒரு பெண் இருப்பது ஊர்ஜிதமாகிறது. கம்பராமாயணம் மட்டுமின்றி பாரத தேசத்தின் பல்வேறு இதிகாசங்களில் பெண் என்ற சக்தியின் மகத்துவம் ஆணித்தரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**"சிறுமியரெல்லாம் தேவியின் வடிவம் | சிறுவர் அனைவரும் இராமரே"**

**வெ. சிவசங்கரி**

# “பாரத தேச புனித யாத்திரை”

திருச்சி K.கணேசன்

**ஆசிரியர் பற்றி ஒரு சிறிய அறிமுகம் :**

*திரு.K.கணேசன் (65 வயது இளைஞர்) திருச்சிராப்பள்ளியில் சுமார் 53 வருடங்களாக வசித்து வருகிறார். இவர் திருச்சி BHEL நிறுவனத்தில் 38 வருடங்கள் பணிபுரிந்து 2014-ல் ஓய்வு பெற்றார். பல கல்லூரிகளில் 25 வருடங்களுக்கு மேலாக பகுதி நேர விரிவுரையாளராக விரும்பி தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். மேலும் தினமணி பத்திரிக்கையுடன் இணைந்து பல மாவட்டங்களில் 10, 11, 12 ம் வகுப்பு மாணவமணிகளுக்கு “சிகரத்தை வெல்வோம்” மாணவ வழிகாட்டி நிகழ்ச்சியை நடத்தியவர். பல பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு Personality development நிகழ்ச்சியினை நடத்தியவர்.* *Above all he Loves teaching . *

---

*சித்தத்தை சிவன் பால் வைத்துள்ள அன்பர்கள் அனைவருக்கும் அடியேனின் பணிவான நமஸ்காரம். பாரத தேசத்தின் பல கோடி இந்து மத மக்களுக்கு முக்கியமான புனித, புண்ணிய ஸ்தலங்கள் இரண்டு மட்டுமே. ஒன்று காசி எனப்படும் வாரணாசி மற்றொன்று இராமேஸ்வரம். அடியேன் BHEL யிலிருந்து பணி ஓய்வு பெற்ற பின் என் தர்ம பத்னி சௌபாக்யவதி மீனலோசனியுடன் 2015 ஏப்ரல் மாதம் எந்த டிராவல்ஸின் மூலமும் பயணிக்காமல் (அப்பொழுது தான் நாம் நிதானமாக ஸ்ரத்தை உடன் காசி யாத்திரையினை சிறப்பாக செய்ய முடியும்) எனவே நாங்கள் இருவர் மட்டும் இறைவன் மற்றும் எங்களின் பித்ருக்கள் ஆசியுடன் 15 நாட்கள் இராமேஸ்வரம், ப்ரயாகை, காசி மற்றும் கயா ஆகிய ஸ்தலங்களுக்கு புனித யாத்திரையாக சென்று வந்தோம். நாங்கள் சென்று வந்த அனுபவத்தினை இந்த தொடர் கட்டுரையின் முதல் புனித யாத்திரையாக வாசகர்களுக்கு சுருக்கமாகவும், பயனுள்ளதாகவும் தொகுத்தளிக்கின்றேன். இப்படிப்பட்ட புனித ஸ்தலங்களும் புண்ணிய நதிகளும் நம் இதயங்களில் நிறைந்த தெய்வங்களுடன் பின்னிப்பிணைந்து ஈடு இணையற்ற பாரம்பரியமும் பண்பாடும் கொண்டதே நம் பாரத நாடு.*

*ஆன்மீகம் என்பது ஆத்மாவை மேம்படுத்தும் ஓர்*

உன்னதமான செயலாகும். பக்தி செய்ய மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும். பொறாமை, கோபம், சுயநலம் போன்றவற்றை மனதிலிருந்து அகற்ற வேண்டும் என்பதே ஆகும். எல்லோரிடமும் வேற்றுமை இன்றி பெரியவர், எளியவர், ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாமல் உண்மையான பக்தியோடு இதனைக் கடைபிடித்தோமானால் இறைவனின் திருவடியை நாம் கண்டிப்பாக அடைய முடியும்.

அனைவரும் வருடம் ஒரு முறையாவது குடும்பத்தாருடன் பல சிவ, வைணவத் தலங்களுக்குச் சென்று இறைவனை தரிசித்துத் திரும்புவது மிகவும் புண்ணியந்தரும் செயல் மட்டுமல்ல, வாழ்வில் நல்ல புத்தொளியும் மனதில் மிகுந்த புத்துணர்வும் ஊட்டும் என்பது நிதர்சனமான உண்மை.

காசியாத்திரை செல்வது என்று முடிவு செய்தவுடன் முதலில் வீட்டில் விநாயகப்பெருமானுக்கு வைதீகர்களின் துணையுடன் யாத்ரா தான பூஜை செய்ய வேண்டும். “எங்களது காசி யாத்திரை எந்த விதமான விக்னமும் இல்லாமல் நிறைவேற உனது பரிபூரண அருள் வேண்டும்.” என ஆனைமுகத்து விநாயகரிடமும், அவரவர் குலதெய்வத்திடமும் மற்றும் தங்களின் பித்ருக்களிடமும் மனம் உருகிப் பிரார்த்தனை செய்து யாத்திரையினைத் தொடங்க வேண்டும்.

ஐந்து கட்டளைகள் :

1. கணவன், மனைவி இருவரும் சேர்ந்து தான் காசி யாத்திரை செய்ய வேண்டும்.

2. பக்தி உணர்வு மட்டுமே மேலோங்கி இருக்க வேண்டும்.

3. யாத்திரையின் போது கணவனும் மனைவியும் சேர்ந்து தான் எல்லா சடங்குகள் மற்றும் வழிபாடுகள் செய்ய வேண்டும்.

4. யாத்திரையின் போது புலனடக்கம் மிகவும் அவசியம்.

5. காசியாத்திரையின் பிரதான நோக்கம் பித்ருக்கள் (முன்னோர்) வழிபாடு தான். இதை நிறைவேற்றுவதற்கு ஓர் வரிசைக்கிரமம் இருக்கிறது. முதலில் இராமேஸ்வரம், பிரயாகை, காசி, கயா மீண்டும் காசி & மீண்டும் இராமேஸ்வரம் என்ற வரிசையில் பிதரர் வழிபாட்டுச்சடங்குகளை முதலில் செய்ய வேண்டும். பிறகு தான் இறைவழிபாடு.

தொடரும்

# வழங்கி, வணங்கி மகிழ்தல் ஊரப்பாக்கம் வேதபாரதி




வாய்ப்பு கிடைக்கும் போது நாம் மற்றவர்களுக்கு உதவி செய்தல் பேரின்பம். தானமும், தொண்டும் இறைவனுக்கு பிடித்த விஷயம். கடந்த மாதம் முதல் வேதபாரதி ஊரப்பாக்கம் குழுவினர் ஸ்ரீ அனந்த கிருஷ்ணன், ஸ்ரீ சந்திரசேகர், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் வசதி குறைவாக உள்ளவர்களை தேடிப்பிடித்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.1500/- மதிப்புள்ள மளிகைப் பொருட்கள் வழங்கி இறைவனின் பேரருள் பெற்றார்கள். 50 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியில் நிதி வழங்கி உதவி செய்தவர்கள், ஆய்வுப்பணி செய்த களப்பணி செய்தவர்கள் எல்லோரையும் வேதபாரதி மனதாரப்பாராட்டுகிறது.

என்றும் அன்புடன் ஆசிரியர்.






## கூடாது, கூடாது, கூடாது

1. வீட்டில் நித்தியம் செய்யும் பூஜையை நிறுத்திவிட்டு கோயிலுக்குச் செல்லக்கூடாது.
2. குளிக்காமல் கோயிலுக்குச் செல்லக்கூடாது
3. பிணத்தைப் பார்த்தபின் கோயிலுக்குப் போகக்கூடாது.
4. மல ஜலங்களை அடக்கிக்கொண்டு கோயிலுக்குப் போகக்கூடாது.
5. மிருகங்களின் தோலால் செய்த பொருட்களுடன் கோயிலில் பகவானை தொழக்கூடாது.
6. கோபத்துடன் கோயிலுக்குப் போகக்கூடாது.
7. துவஜஸ்தம்பம், பலிபீடம் கடந்து உள்ளே சென்றபின் எங்கேயும் கீழே விழுந்து நமஸ்காரம் செய்யக் கூடாது.
8. பகவான் சிவனுக்கும் நந்திக்கும் இடையே குறுக்காக நடத்தல் அல்லது பிரதக்ஷிணம் செய்தல் கூடாது.
9. கோயிலின் உள்ளே மூக்கை சிந்துதல், தும்முதல், கோட்டுவாய் (கொட்டாவி) விடுதல் கூடாது.
10. கோயிலுக்குள் பிறரை நமஸ்கரித்தல் கூடாது.

**- பரிதி**

**வாசகர்கள் கவனத்திற்கு :** புத்தகம் படித்துவிட்டு நிறைய நண்பர்கள் தொலைபேசி மூலமாக கருத்துக்களை என்னிடம் தெரிவிக்கிறீர்கள் தயவு செய்து வாட்சப் மூலம் பதிவு செய்தால் மட்டுமே புத்தகத்தில் வாசகர் கடிதத்தில் பதிவு செய்ய முடியும்.

**ஆசிரியர்**

வேதபாரதி திருமதி.சாந்தா நாகராஜன் அவர்களின் புதல்வன் ஸ்ரீ சுரேஷ் அவர்கள் உதவியுடன் வசதி குறைவாக உள்ள வேத பண்டிதர்கள் மற்றும் கோவில் திருப்பணியாளர்களுக்கும் நிதியுதவி மற்றும் பொருளுதவி வழங்கும் வாய்ப்பு எல்லாம் வல்ல பரமேஸ்வரனால் கிடைக்கப்பெற்றது.

- வேதபாரதி.

## ஏப்ரல் 30, மே 1, 2, 3 நாட்கள் புதுவையில் நடக்க இருந்த சந்த்யாவந்தன பயிலரங்கம் COVID 19 காரணத்தினால் ஏப்ரல் 30 முதல் மே 18 வரை ONLINE-ல் வேத பாரதி நடத்திய நிகழ்ச்சிகளின் தொகுப்பு

*1. 28.04.2020 ஸ்ரீ ஆதி சங்கரர் ஜெயந்தி சிறப்பு நிகழ்ச்சியாக குழந்தைகளுக்கு தோடகாஷ்டகம் சொல்லிக்கொடுத்து பாடம் நடத்தப்பட்டது. 450 குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பெற்றோர்கள் சிறந்த முறையில் தம் குழந்தை சொல்லுவதை மொபைலில் வீடியோ எடுத்து அனுப்பி உதவினார்கள். கலந்து கொண்ட குழந்தைகள் அனைவருக்கும் ஸ்ரீ ஆதி சங்கரர் படமும் சான்றிதழும் தயாராகி உள்ளது. வேதபாரதி குழுவினர் ஸ்ரீ இராமகிருஷ்ணன், ஸ்ரீ சங்கர் ஏற்பாடுகள் செய்தனர். பகுதி பொறுப்பாளர்களாக நங்கநல்லூர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ ஸ்ரீராம், ஸ்ரீ சுப்ரமணியம், மயிலாப்பூர் ஸ்ரீமதி உஷா, மந்தைவெளி ஸ்ரீமதி பத்மாவதி, தாம்பரம் ஸ்ரீ நாராயணன், தர்மபுரி ஸ்ரீ சந்திரசேகர் ஆகியவர்களும் குடந்தை ஸ்ரீமதி ஸ்ரீவித்யா, திண்டுக்கல் ஸ்ரீமதி அகிலா ஆகியவர்கள் குழந்தைகளை ஒருங்கிணைத்தார்கள்.*

*2. 30.04.2020 முதல் 03.05.2020 வரை தினமும் காலை மற்றும் மாலை இரு வேளையும் யஜுர் வேத சந்த்யாவந்தனம் வகுப்பு* online *மூலம் சிறப்பாக நடத்தப்பட்டது. பல ஊர்களில் இருந்து 45 பேர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.*

*இந்த யஜுர் வேத* online Programme-ஐ Er.*ஆசீர்வாத்* NJL.*ரமேஷ், ஸ்ரீ இராமகிருஷ்ணன், ஸ்ரீ சங்கர், ஸ்ரீ சந்திரசேகரன் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைத்தனர். முதல் முறையாக* online-*ல் நடத்தினாலும் சிறப்பாக அமைந்தது குருவின் கருணையினால் தான் சாத்தியமாயிற்று. சாஸ்த்திரிகள் ஸ்ரீ சிவசங்கர் மிகவும் பொறுமையுடனும் நல்ல உச்சரிப்புடனும் தெளிவாகவும் நடத்திக் கொடுத்தார்கள். அனைவரும் வேத பாரதியின் முயற்சியினை வெகுவாக பாராட்டினார்கள்.*

*3. 05.05.2020 முதல் 07.05.2020 வரை தினமும் காலை மற்றும் மாலை இரு வேளையும் ஸாம வேத ஸந்த்யாவந்தனம் வகுப்பு* online *மூலம் சிறப்பாக நடத்தப்பட்டது. பல ஊர்களில் இருந்து 46 பேர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். நங்கநல்லூர் ஸ்ரீ ஸ்ரீராம் பொறுப்பாளராக இருந்து நடத்தினார். சாம வேத* online

சந்த்யாவந்தனம் சிறப்பாக அமைந்தது. மடிப்பாக்கம் ஸ்ரீ கார்த்திக் சாஸ்த்ரிகள் மிகவும் சிறப்பாகவும் பொறுமையுடனும் தெளிவாகப் புரியும்படியும் நடத்திக் கொடுத்தார்கள். அனைவரும் வேத பாரதியின் இந்த சிறந்த முயற்சியினை வெகுவாக பாராட்டினர்.

4. 09.05.2020 முதல் 11.05.2020 வரை தினமும் காலை மாலை இரு வேளையும் ரிக் வேத ஸந்த்யாவந்தனம் வகுப்பு online மூலம் சிறப்பாக நடத்தப்பட்டது. பல ஊர்களில் இருந்து 44 பேர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். UAE போன்ற வெளி நாட்டிலிருந்தும் கலந்து கொண்டனர். ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ சங்கர் ஆகியோர் ஒருங்கிணைந்து நடத்தினார்கள். ரிக் வேத online சந்த்யாவந்தனம் சிறப்பாக அமைந்தது. ஸாஸ்த்ரிகள் கும்பகோணம் ஸ்ரீ கைலாச கனபாடிகள் மற்றும் அவரின் சீடர் ஸ்ரீ சிம்ம ப்ரகாஷ் சாஸ்த்ரிகள் மிகவும் பொறுமையுடனும் தெளிவாகவும் & புரியும்படியும் நிதானமாகவும் நடத்திக் கொடுத்தார்கள். அனைவரும் லாக்டவுன் நேரத்திலும் நடத்தியதை வெகுவாகப் பாராட்டினார்கள்.

5. தெலுங்கு சம்ப்ரதாய ஸந்த்யாவந்தனம் online 15.05.2020 முதல் 17.05.2020 வரை தினமும் காலை மற்றும் மாலை இரு வேளையும் ஸந்த்யாவந்தனம் வகுப்பு online மூலம் சிறப்பாக நடத்தப்பட்டது. பல ஊர்களில் இருந்து 55 பேர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். USA போன்ற வெளி நாட்டிலிருந்தும் கலந்து கொண்டனர். ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ சங்கர், ஊரப்பாக்கம் ஸ்ரீ சந்திரசேகர் மற்றும் ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் ஆகியோர் ஒருங்கிணைந்து நடத்தினார்கள். ரிக் வேத online ஸந்த்யாவந்தனம் சிறப்பாக அமைந்தது. சாஸ்த்ரிகள் குன்றத்தூர் ஸ்ரீ சோமசேகர கனபாடிகள் மிகவும் சிறப்பாக புரியும்படி நிதானமாகவும் நடத்திக் கொடுத்தார்கள். அனைவரும் வேதபாரதியின் இந்த முயற்ச்சியை வெகுவாகப் பாராட்டினார்கள்.

புதுவை ஸ்ரீ பட்டாபிராமன், ஸ்ரீ சந்திரசேகர் புதுவையில் உள்ள சமூக மக்களை ஒருங்கிணைத்தார்கள்.

திருச்சி ஸ்ரீ கணேசன் அவர்கள் எல்லா சாகைகளிலும் கலந்துகொண்டு ஸந்த்யாவந்தன பொது விதிகளை சொல்லிக்கொடுத்து சிறந்த வழிகாட்டினார்கள்.

ஆசிரியர்.

## தெரிந்துகொள்வோமே

*விவாஹம் ஆன பிராமணர்கள்* **“பஞ்சகச்சம்”** *வேஷ்டி கட்டிக்கொள்வார்கள். இதற்கு* **“பஞ்சகச்சம்”** *என்ற பேர் எப்படி வந்தது தெரியுமா?*

**“பஞ்சம்”** *என்றால்* **“ஐந்து”** *என்றும்* **“கச்சம்”** *என்றால்* **“சொருகுதல்”** *என்றும் பொருள். அதாவது ‘‘பஞ்சகச்சம்’’ கட்டிக்கொள்ளும் போது உடலின் ஐந்து இடங்களில் வேஷ்டியை சொருகிக்கொள்ள வேண்டும். அவை*

*1. வலது இடுப்பில் ஒரு சொருகல்*
*2. இடது இடுப்பில் ஒரு சொருகல்*
*3. பின்புறத்தில் ஒரு சொருகல்*
*4. தொப்புள் பகுதியில் இரண்டு*

*பஞ்சகச்சம் பற்றிய ஒரு ஸ்லோகம்*

**குக்ஷித்வயே ததா ப்ருஷ்டே நாபௌ த்ளெவ பரிகீர்த்திதௌ!**
**பஞ்சகச்சா: ஸ்து தே ப்ரோக்தா: சர்வ கர்மஸு ஷோபனா:!!**

*குக்ஷி = இடுப்பு*
*குக்ஷித்வயே இரண்டிடுப்பில்*
*ததா = அவ்வாறு*
*ப்ருஷ்டே = பின்புறத்தில்*
*நாபௌ = தொப்புளில்*
*கச்சம் = சொருகுதல்*
*பஞ்சகச்சா = ஐந்து சொருகலானது*
*சர்வ கர்மஸு = எல்லா காரியங்களிலும்*
*ஷோபனா = மங்களகரமானதாக*

*- பரிதி.*


## “வேதாந்த பிரபோதம்” புத்தகம்

*நம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.*

*தொடர்புக்கு :* **9444445156 / 97909 20672**

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*



- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

***48625585 / 9840545585***




## ஆக்ஞா
### மனநல ஆலோசனை மையம்

**நாங்கள் வழங்கும் சேவைகள் :**

- *பள்ளி மாணவர்களுக்கு, கல்வியாளர்களுக்கு குடும்ப உறவுகளுக்கு, நிறுவனங்களுக்கு, ஆலோசனை வழங்குதல்*
- *பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு வழிகாட்டுதல்*
- *பயமின்றி தேர்வு எழுத பயிற்சி வழங்குதல்*
- *சரியான துறையை தேர்ந்தெடுத்தல் போன்றவற்றிற்கு வழி காட்டுதல்*
- *குடும்ப உறவுகள் மேம்பட தனித்தனியாக மனநல ஆலோசனை வழங்கப்படும். மென்பொருள் நிறுவனங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு மன உளைச்சல் நீங்க, பணி மேம்பட, மன அழுத்தம் குறைய பயிற்சி அளிக்கப்படும். ஆலோசனை வழங்கப்படும்.*

**நேரம் : மாலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை**

**முன்பதிவு அவசியம் : 94448 08799**

# குருவருள்தான் என் வெற்றிக்கு காரணம்



*2020ம் ஆண்டு, மார்ச் மாதம் 22 ம் தேதி, கொரோனா வைரஸ் பரவுதலை தடுப்பதற்காக தேசம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் பொது மக்கள் உண்மையிலேயே மிகுந்த மன வருத்தத்திற்கு உள்ளானார்கள். எந்த ஒரு மனிதனும் வீட்டிற்குள்ளேயே முடக்கப்பட்டு, எந்த ஒரு செயலையும் செய்ய இயலாமல் போகும் போது மன அழுத்தத்திற்கு உள்ளாகத்தான் செய்வான். இதன் காரணமாக, யாரும் எதிர்பார்க்காத நடவடிக்கைகளில் ஈடுபடவும் முயற்சிக்கலாம். இத்தகைய சூழ்நிலையில் குருவின் உபதேசங்களும், அறிவுறைகளும் அவனுக்குள் எழுந்திருக்கும் பயனற்ற சிந்தனைகளை தெளியவைப்பதுடன் புத்துணர்வும் அமைதியும் நல்குவதாக அமையும்.*

*மரியாதைக்குரிய* **ஜெயின் மகான் நம்ரமுனி** *அவர்கள், தனது அருளுரை ஒன்றில் இந்த ஊடரங்கு காலம்,* **“ஒருவன் தன் அதிர்ஷ்டத்தை உயர்த்திக் கொள்ள உதவும்”** *என்றார். இயற்கையும் மனிதனைப் போலவே உணர்வுகளை வெளிப்படுத்துகிறது என்றார். தன் விதியைத் தானே உருவாக்கிக் கொள்பவன் மனிதன் என்கிறார். நமது வாழ்க்கையில் பல நிகழ்வுகள் நடந்து அதன் மூலம் நாம் எதிர்பார்க்காத சாதனைகளைச் செய்து, கடவுளுக்கும் நன்றிகளை சொல்கிறோம். ஆனால் அவை பற்றி நாம் ஆழமாக ஆராய்ச்சிகள் செய்து பார்ப்பதில்லை. அப்படிப் பார்த்தோமேயானால் புரிந்திருக்கும் அந்த சாதனைகள் அல்லது வெற்றிகள் நமது சிந்தனைகளின் விளைவுதான் என்பது. சிந்தனைகள் தவறானால் தவறான விளைவுகளே ஏற்பட்டிருக்கும். ஆனால் நாம் அவ்வாறு விளைவுகளின் காரணங்களை சிந்தித்துப் பார்ப்பதில்லை. தவறான விளைவுகள் அல்லது தோல்விகள் ஏற்பட்டுவிட்டால் வேதனைப்பட*

*ஆரம்பித்து விடுகிறோம்.“ஏன் எனக்கு இப்படி?” என்று. நம்மை அறியாமல் நமது தறவான சிந்தனைகளின் விளைவுதான் இது என்பதை நாம் உணர வேண்டும். எந்த ஒரு விளைவும் நம்முடைய நல்ல அல்லது தீய சிந்தனைகளின் விளைவே என்பதை நாம் உணர்ந்தேயாக வேண்டிய கால கட்டம் இப்போது. நமது எண்ணங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதுடன் தூய்மைப்படுத்திக் கொள்வதும் அவசியமாகிறது.*

*2012-ம் ஆண்டு, என்னுடைய குருவை நான் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த சந்திப்பு, என் வாழ்க்கையின் பாதையை அதிசயத்தக்க வகையில் மாற்றிவிட்டது. நான் அதுவரை ஒரு எழுத்தாளனாக இருக்கவில்லை. குருவின் ஆசிகளால், நான் சிறு சிறு கட்டுரைகளை எழுத ஆரம்பித்தேன். மும்பை, கட்ச், ராஜ்கோட், சென்னை ஆகிய இடங்களிலிருந்து வெளிவரும் செய்தி ஊடகங்களில் அவை வெளியாக ஆரம்பித்தன.*

*எனது குருநாதரின் உபதேச அருளுரைகள் மற்றும் என் தாய் மதமான ஜைனமதத்தின் பல்வேறு விஷயங்களைப் பலரும் அறியச் செய்வதே என் எழுத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. இது என் அதிர்ஷ்டத்தை மேன் மேலும் உயர்த்திக் கொண்டே போனதுடன், எதிர்பாராத பல இனிய சம்பவங்களையும் என் வாழ்க்கையில் சந்திக்கவைத்தது. என்னுடைய சிறந்த சிந்தனைகளும், எழுத்துக்களும் புத்தக வடிவத்தில் வெளியாகியது. என் முதல் புத்தகம், மிகச் சிறந்த இலக்கியவாதிகள் நிறைந்திருந்த மாபெரும் சபையினில் வெளியிடப்பட்டு, ஊடகங்களில் செய்தியாகவும் பிரசுரிக்கப்பட்டு, தேசத்தின் அனைத்து பிரதேசங்களுக்கும் எட்டியது.*

*மும்பையைச் சேர்ந்த* **திருமதி.மாயா ஜோஷி** *என்பவர், குஜராத்தி மொழியில் நான் எழுதியிருந்த கட்டுரைகளை எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முன்வந்தார். அவரைப்போலவே சென்னையைச் சேர்ந்த*

**டாக்டர்.ஷ்யாமா** *அவர்கள், செம்மொழியாகிய தமிழ் மொழியில் மொழிபெயர்க்க முன்வந்தார். இவர்களை நான் நேரில் கூட சந்திக்கவில்லை. எல்லாம் சமூக ஊடகங்கள் மூலமாகத்தான் நிகழ்ந்தன. தற்போது என் குஜராத்தி புத்தகம், ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவரவிருக்கிறது. என்னைப்போன்ற ஒரு சாதாரணனுக்கு இந்த வெற்றிகள் மகத்தானது.*

*நான் மீண்டும், மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன், சிறந்த சிந்தனைகள் மட்டுமே சிறப்பான வாழ்க்கையை ஏற்படுத்தும். இந்த இக்கட்டான ஊரடங்கு காலகட்டத்தில் குற்றம் குறைகளை சொல்லிக்கொண்டிருக்காமல், ஆக்கபூர்வமாக சிந்தித்து நமது அதிர்ஷ்டத்தை நாமே உயர்த்திக்கொள்ளலாம். எதிர்பாராமல் கிடைத்துள்ள இந்த கால கட்டத்தை வீணாக்காமல் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டு, இந்த நோய் தொற்றிலிருந்து நம்மையும் நம்மை சார்ந்தவர்களையும் காப்பாற்றிக் கொள்வதுடன் ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட்டு மேலும் பல புதிய வெற்றிகளை அடைவோம்.*

**பின்குறிப்பு : என் மனமார்ந்த நன்றிகள் :**

*என் கட்டுரைகள் ஒரு பிரபலமான தமிழ் பத்திரிகையில் என் இனிய சினேகிதி ஷ்யாமா அவர்களின் மூலம் வெளிவரும் என்று கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. இதுவே என் குருவின் திருவருள்தான்.* **“வேதபாரதியின் ஆசிரியர், மற்றும் குழுவினர்** *அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைப் படித்துவிட்டு என் தமிழ் நண்பர்கள் பலரும் என் எழுத்தை பாராட்டி செய்திகள் அனுப்பியுள்ளனர். அவையனைத்தும் வேதபாரதி இதழுக்கு உரியதாகும்.*

**தமிழாக்கம் : டாக்டர் ஷ்யாமா**

**அமிதாப் தோஷி**

*சென்னை.*

# புரோஹிதர்

*-ஆதிரையன்*

**அறிமுகம்**

*"ஞானமே வடிவான சாந்த ஸ்வரூபியாக அபரிதமான*
*கருணையை மழையாகப் பொழியும் காஞ்சி*
*மாமுனியின் பாதம் பணிகிறேன்"*

*இத்தொடரை சமூகத்திற்கு சரியாகக் கொண்டு செல்ல அபயம் வேண்டி குருவை பிரார்த்திகிறேன்.*

*ஒரு வேதத்தின் வளர்ச்சிக்கும், அதன் சிறப்புக்கும், பெருமைக்கும் சமுதாய அமைதி மிக முக்கியமானது. "சாந்தி" என்னும் வார்த்தையின் மூலம் வேதத்தின் வாயிலாக மந்திரங்களின் பல இடங்களிலிருந்து இதை பார்க்கிறோம்.*

*பாரத தேசத்தின் பெரும்பகுதி கிராமங்கள், சென்னையின் பல பகுதிகள் உள்ளிட்ட இன்றைய நகரங்கள் யாவும் கிராமங்களே! தவச் சீலர்கள், மகான்கள், ஞானிகள், சித்தர்கள் வாழ்ந்த தற்போதும் வாழுகின்ற உலகின் மையப் பகுதியே பாரதம்.*

*தனது சிந்தனையின் மூலம் உணர்ந்த "மகாத்மா காந்தி" அவர்கள் கிராமங்கள் பாரத தேசத்தின் "ஆன்மா" என்றார்.*

*தேசத்தின் ஆன்மாவான கிராமங்கள் அமைதியாக இருக்கவும், அக்கிராம மக்கள் நெறிசார்ந்து வாழவும், இறைபக்தியும் (சத்சங்கமும்), மூதாதையர்களின் ஆசியும் முக்கிய பங்கு வகிக்கத் தேவையான அடிப்படை அஸ்திவாரத்தை அமைத்தவர்கள் இப்போதும் அமைத்து வருபவர்கள் "புரோஹிதர்கள்".*

*"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்*
*செந்தன்மை பூண்டொழுகலான்"*

*திருக்குறள், நீத்தார் பெருமை அதிகாரத்தில் இக்குறள் மூலம் கூறும் வள்ளுவனின் வாக்கிற்கேற்ப, கிராம நன்மையே தன் நன்மை, சமுதாய மக்களின் நலமே தன் நலம் என்ற சிந்தனையோடு இயங்குகிறார்கள்.*

*"புரோஹிதர்" - புரோ - உலகம், ஹிதர் - இதமாக நடந்து கொள்பவர். உலகத்திற்கும், உலக உயிர்களுக்கும் நன்மையையே தனது நலனாக கருதி செயலாற்றுபவர் என்ற*

விளக்கத்தையும் சிலர் தருகிறார்கள். கிராமங்களில் இவர்களை 'பஞ்சாங்க ஐயர்'' என்றே அழைக்கின்றனர். அந்தளவிற்கு இவர்களது வாழ்க்கை பஞ்சாங்கத்தோடு பிணைக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள், ஒரு கிராமத்தில் ஒன்று அல்லது இரண்டு குடும்பங்கள் அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட சில கிராமங்களுக்கு ஒரு குடும்பம் என்ற விகிதாச்சாரத்தில் வசிக்கின்றனர்.

இவர்கள் புரோஹிதம் பார்க்கும் கிராமங்களை தங்கள் குடும்பமாகவும், கிராம மக்களை தங்கள் குடும்ப உறுப்பினர்களாகவும் பாவித்து அவர்களோடு ஒன்றிணைந்து தங்கள் வாழ்க்கையையும் நகர்த்துகின்றனர்.


கிராம மக்களின் இல்லங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி தருவது மட்டுமின்றி அவர்களுக்கு பெரும் வழிகாட்டியாகவும் பல நேரங்களில் கிராம சமுதாயததை கட்டமைக்கும் பணிகளையும் சாதாரண அன்றாட வாழ்க்கையின் செயல்பாடுகளிலே செய்து வருகின்றனர்.

மக்களின் நலனில் பெரும் பங்கு வகிக்கும் தியாக உணர்வு கொண்ட இவர்களது செயல்களை அங்கீகரிக்கும் மக்கள், இறைவனுக்கு அடுத்தபடியாக பாவித்து ஸ்வாமி என்று அழைக்கிறார்கள் மரியாதை உணர்வுடன்.

பல நேரங்களில் அரசு அதிகாரிகள், கிராம நலம் சார்ந்த முடிவுகளை எடுக்கும்போதும், திட்டங்களை செயல்படுத்தும் போதும் இவர்களது கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆலோசிப்பதுண்டு.

புரோஹிதர்களின் சேவைகளுக்கு உட்பட்ட கிராமங்களின் குடும்பத்தார் இறப்பு, பிறப்பு, குறிப்புகள் அடங்கிய அட்டவணை (Register on Gazette) பல சிக்கலான வழக்குகளில் சரியான தீர்ப்பு சொல்வதற்கான சான்றாக / சாட்சியாக நீதிமன்றங்களுக்கு துணை புரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தொடரும்


MULTI-PURPOSE SURFACE CLEANSER
NSF
Dilution Ratio – 1:100
Highly Concentrated
Safer to skin
VESSEL CLEANSER
Cost/Utensil = 0.45 Paise/vessel (<1Paise/Utensil)
CARBON CLEANSER
DISINFECTANT CLEANSER
Approved by Intertek
WOPPER®
Fluid Chemistry
Textile
Agriculture
Domestic
Food & Hospitality
Detergents
Paint & Printing ink
Leather
Rubber
Automobile
Construction & Hardware
Celebrate productivity & cleanliness
Textile | Leather | Rubber | Construction & Hardware | Agriculture
Paint & Printing Inks | Domestic | Food & Hospitality | Detergents
INDIA | UAE | SINGAPORE | QATAR | SRI LANKA
DE-SCALER
WATER TANK CLEANSER
100% organic & safe for lungs
Free from Chlorine
OVEN & GRILL CLEANSER
Less maintenance cost
Maintains aesthetics & performance of machines
URINAL CLEANSER
Dissolves uric acid salt buildup.
Eliminates rust deposits.
Preserve environmental hygiene.
Reduces maintenance cost.
Competitive cost.

**G. SIVAGAMASUNDARI**
**99940 89133**



**N. GURUMURTHY**
**99940 89140**

# SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**


# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

*செல்:* **9445121080, 7200935145**

*திருகோவில் உழவாரப்பணி மன்றம் சென்னை வேளச்சேரியில் சிவத்திரு ஆடலரசு ஐயா அவர்கள் தலைமையில் எல்லாம் வல்ல சிவபெருமான் அருளால் சிவனடியார்கள் பல ஆண்டுகளாக உழவாரப்பணி செய்து வருகிறார்கள். கடந்த 9 ஆண்டுகளாக 46 ஆலயங்களில் இனம், மதம், மொழி வேறுபாடின்றி அனைவருக்கும் பசிப்பிணி போக்கும் அன்னதானப் பணியை தொடர்ந்து செய்து வருகிறார்கள். குறிப்பாக பாண்டிச்சேரி அரியாங்குப்பம் சமையல் கூடத்தில் சமையல் செய்து சுற்றி உள்ள 14 கிராமங்களில் உள்ள திருக்கோவில்களில் மதியம் அன்னதானம் வழங்குகிறார்கள். இச்சிறந்த பணிக்காக தங்களை அர்ப்பணித்து செயலாற்றும் அடியார் பெருமக்கள், பொருள் உதவி, பண உதவி செய்யும் நல் உள்ளங்கள் ஆரோக்யமாக வாழ்ந்து இப்பணி தொடர்ந்து நடைபெற வேதபாரதி வாழ்த்துகிறது. எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நலமுடன் வாழ ப்ரார்த்தனை செய்கிறோம்.*

*உழவாரப்பணி அன்னதான குழு*
*போன் : 9445121080 / 7200935145*

*அன்புடன் : செயலாளர்*
*வேதபாரதி*

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**

**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**

**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**


1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு, வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும் இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜீவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.